முச்சந்தி முரளி



"குழந்தை பிறக்கமுதலே பல்லுக்கொழுக்கட்டை கொட்ட நாள் குறிச்ச மாதிரி இருக்கு உந்தத் தேர்தல் கண்காணிப்புக்கதை"


Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 237

சனிக்கிழமை
20 ஜூலை 2024

ஆடி 04 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


## திடீரென உடைந்த வீடு இருவர் அருந்தப்பு!

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜூலை 20

வவுனியா - பூந்தோட்டம் சிறிநகர்ப் பகுதியில் வீடொன்று நேற்றுத் திடீரென உடைந்து வீழ்ந்தது. அந்த வீட்டில் வசித்து வந்த கணவனும் மனைவியும் வீட்டுக்கு வெளியில் இருந்ததால் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்கள். வீட்டின் பின்பக்கச் சுவர், கூரைப்பகுதி என்பன முற்றாக உடைந்து வீழ்ந்ததாக அவர்கள் தெரிவித்துள்ள 11

### யாழிலிருந்து சென்ற

## பேருந்து கவிழ்ந்து விபத்து 30க்கு மேற்பட்டோர் காயம்

திருகோணமலை, ஜூலை 20

யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமத்தை நோக்கிச் சென்ற பஸ் மூதூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கங்கை பாலத்துக்கு அருகே கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 30க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் மூதூர் தள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-50)



# தமிழரசுக் கட்சியின் வழக்கு தொடர்ந்தும் இழுபறிக்குள்!

### பதில்மனு தாக்கல்செய்யுமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவு!



**திருகோணமலை, ஜூலை 20**

**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவுக்கு எதிராகத் திருகோணமலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நான்கு தரப்பினர் பதில் மனு தாக்கல் செய்துள்ள நிலையில், மிகுதி நான்கு தரப்பினரையும் பதில்மனுவை தாக்கல் செய்யுமாறு தெரிவித்துள்ள நீதிமன்றம் ஜூலை 30ஆம் திகதிவரை அவகாசம் வழங்கியுள்ளது.**

11

## 22 ஆம் திருத்தம் வர்த்தமானியில்!

கொழும்பு, ஜூலை 20

அரசமைப்பின் 22ஆவது திருத்தம் ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் அரசமைப்பில் காணப்படும் குறைபாட்டை நிவர்த்திக்கும் வகையிலேயே இந்தத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 11

### ஜனாதிபதித் தேர்தல்

## ஜூலை 26ஆம் திகதி நாள் நிர்ணயமாகும்?

கொழும்பு, ஜூலை 20

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி எதிர்வரும் 26ஆம் திகதிக்குள் தேர்தல் ஆணைக்குழுவால் அறிவிக்கப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது. 11

## குழந்தையைக் கைவிட்டு குடும்பப்பெண் ஓட்டம்!

### கணவன் வழங்கிய முறைப்பாட்டுக்கமைய பெண்ணும் காதலனும் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம், ஜூலை 20

இரண்டரை வயதுப் பிள்ளையைக் கைவிட்டுவிட்டு, தனது காதலனுடன் சென்ற குடும்பப் பெண் அவருடைய கணவன் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய 11

## ஜனாதிபதித் தேர்தலில் சர்வதேசக் கண்காணிப்பு

கொழும்பு, ஜூலை 20

ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலை, சர்வதேச தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் கண்காணிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப் 11




### சாவ. மருத்துவமனையில்

## கடமை நேரத்தின்போது மருத்துவர்கள் எங்கே?

### விஷஜந்துக் கடிக்கு சிகிச்சையின்மை; விளக்கம்கோரி கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் கடந்த 17ஆம் திகதி இரவு மருத்துவர்கள், தாதியர்கள் கடமையில் இல்லாமை தொடர்பில், மனித உரிமைகள் ஆணைக்குழு விளக்கம் கோரிக் கடிதம் அனுப்பியுள்ளது.

விஷஜந்துக் கடிக்கு இலக்கானவர் சாவகச்சேரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகச் சென்றபோது அங்கு 11

## சொகுசுக் கப்பல் வந்தது யாழுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 20

800க்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிக்கொண்டு சொகுசுக் கப்பலொன்று நேற்று காங்கேசன்துறை துறைமுகத்தை அடைந்தது.

சென்னையிலிருந்து புறப்பட்ட இந்தக் கப்பல் கடந்த 11

### கடற்றொழிலுக்காகச் சென்ற

## 4 மீனவர்களை காணவில்லை!

யாழ்ப்பாணம், ஜூலை 20

பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து கடற்றொழிலுக்காகச் சென்ற நான்கு மீனவர்கள் ஒரு வாரமாகியும் கரைதிரும்பாத நிலை 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலும்புத்துண்டுகளை வீசி உரிமைகளைப் பறிக்காதீர்

## இலங்கை ஆசிரியர் சங்கம் கொதிப்பு

**யாழ்ப்பாணம், ஜூலை 20**

**பாடசாலை தரிசிப்பு என்ற போர்வையில் அதிபர், ஆசிரியர்களின் உரிமைகளை மழுங்கடிக்கச் செய்யும் முயற்சியில் கல்வி அமைச்சின் அதிகாரிகள் ஈடுபடுவதைத் தவிர்க்கவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.**

இதுதொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் ஆ.தீபன் திலீசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

பாடசாலைத் தரிசிப்புக்குச் செல்லும் கல்வி அதிகாரிகள், தங்கள் எல்லைகளைப் புரிந்துகொண்டு செயலாற்றவேண்டும்.

கல்வி அபிவிருத்தி தொடர்பான விடயங்களில் மாத்திரமே கரிசனை கொண்டு பாடசாலை தரிசிப்புகளை மேற்கொள்ளவேண்டும். அதனைவிடுத்து அதிபர், ஆசிரியர்களின் உரிமைகளை மழுங்கடிக்கச் செய்யும் விதமான அரச தரப்பின் எலும்புத் துண்டுகளை எமக்கு வீசும் செயற்பாடுகளை நிறுத்தவேண்டும்.

வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட தேசியப் பாடசாலையொன்றுக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தரிசிப்பு என்ற பெயரில் சென்றிருந்த, கல்வியமைச்சின் அதிகாரிகள் கொண்ட குழுவினர், அதிபர், ஆசிரியர்களின் தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு எதிரான கருத்துகளை விதைத்துள்ளனர். அத்துடன் போராட்டத்தில் கலந்துகொள்ளாது விட்டிருந்தால் சம்பள அதிகரிப்பு கிடைத்திருக்கும் என்று தெரிவித்துள்ளது.

கல்வியமைச்சின் அதிகாரிகள் என்ற போர்வையில், ரணில் - ராஜபக்ச அரசாங்கத்தின் எலும்புத் துண்டுகளை வீசுவதற்காகப் பாடசாலைகளைத் தரிசனம் செய்ய வேண்டாம்.

அதிபர், ஆசிரியர்களுக்கு கிடைக்க வேண்டிய சம்பளத்தை வழங்காமல், பல தசாப்தங்களாக எடுபிடிகளாக பிரசாரம் செய்வதை நிறுத்த வேண்டும். கல்வி விடயங்களில் அக்கறை செலுத்தவேண்டும்- என்றுள்ளது. (ச-20)

# கல்வியைக் காப்பதில் புலிகள் சிறந்தவர்கள்

## மனுஷ நாணயக்கார தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 20

தமிழீழ விடுதலைப் புலிகளால்கூட மூடப்படாத பாடசாலைகளை தொழிற்சங்கத்தினர் வாரத்தில் இரண்டு நாள்கள் மூடுகின்றனர். போர்க் காலத்தில்கூட ஆசிரியர்கள் பதுங்கு குழிக்குள் அமர்ந்து பிள்ளைகளுக்குக் கல்வியை வழங்கினார்கள்.

-இவ்வாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய தொழிற்சங்கங்கள் தமது அரசியல் நலன்களுக்காக 10,000 பாடசாலைகளை மூடுவதை வீரமாகக் கருதுகின்றன.

வடக்கில் விடுதலைப் புலிகள் பயங்கரவாத அமைப்பாக இருந்து 30 வருடங்களாகப் போர் இடம்பெற்ற போதும் பாடசாலைகளை மூட அனுமதிக்கவில்லை. இன்று அரசியல் நலன்களுக்காக இலவசக் கல்விக்குக் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளார்கள்- என்றார். (ச-இ)

# இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கோம்

## அலிசப்ரி மீண்டும் உறுதி

கொழும்பு, ஜூலை 20

எமது நிலப்பரப்பையோ அல்லது கடற்பரப்பையோ இந்தியாவின் நியாயபூர்வமான பாதுகாப்பு அக்கறைகளுக்கு எதிரான விதத்தில் மூன்றாம் தரப்பொன்று பயன்படுத்துவதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம்.

-இவ்வாறு சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கியிருக்கும் நேர்காணலில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

எமது அயலகத்தில் எந்தவொரு தரப்பினரும் எவ்விதமான போர் விளையாட்டுகளிலும் ஈடுபடுவதற்கு நாம் அனுமதிக்கமாட்டோம்.

இந்தியா 'பிரிக்ஸ்' போன்ற சில பொதுக்கட்டமைப்புகளில் சீனாவுடன் இணைந்து பணியாற்றுவதைப் போன்று இலங்கையும் அதன் ஏனைய பங்காளிகளுடன் இணைந்து செயலாற்ற விரும்புகிறது - என்றார். (ச-இ)

# தேர்தலுக்கு நிதி 'ரெடி'

## நிதியமைச்சு தகவல்

கொழும்பு, ஜூலை 20

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு நிதியமைச்சுக்கு பணத்தை ஒதுக்கும் திறன் உள்ளதுடன் தேவைக்கு ஏற்ப பணத்தை வழங்கத் தயாராக உள்ளதாகவும் நிதியமைச்சு தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அறிவித்துள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின்படி, எந்தவொரு தேர்தலையும் நடத்துவதற்கு 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் கடுமையான நிதி முகாமைத்துவத்துடன் செயற்படுவதால், அந்தப் பணத்தை வழங்குவதில் எந்தத் தடையும் இல்லை.

தபால், அச்சிடுதல் மற்றும் பாதுகாப்புக்கான செலவுகளை வழங்குவதற்குத் தயாராக உள்ளோம். தேவைக்கு ஏற்ப உரிய பணத்தை விடுவிக்கமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# ரணிலின் வேலைத்திட்டம்: விவாதத்துக்கு வாருங்கள்

## நிதி இராஜாங்க அமைச்சர் அழைப்பு

கொழும்பு, ஜூலை 20

நாடு மிகவும் இக்கட்டான சூழ்லையில் இருந்தபோது நாட்டை மீட்கும்சவாலைஏற்றுக்கொண்ட தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த இரண்டு வருடங்களில் முன்னெடுத்த சரியானபொருளாதாரவேலைத் திட்டத்தின் காரணமாகவே நாட்டில் உறுதிப்பாட்டை ஏற்படுத்த முடிந்ததாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எதிர்மறையான மற்றும் ஆதாரமற்ற போலியான அறிக்கைகளை வெளியிடும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பொருளாதார ஆராய்ச்சி நிறுவனங்களின் அறிஞர்கள் ஆகியோரை பொதுவான மேடையில் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு இராஜாங்க அமைச்சர் அழைப்பு விடுத்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இதனைத் தெரிவித்தார். (ஒ-125)



# '22' நிறைவேறினால் மஹிந்த இறங்குவார்

கொழும்பு, ஜூலை 20

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள 22 ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டு 19 வலுவிழந்தால் மஹிந்த ராஜபக்சவாலும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடமுடியும் என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி இன்னும் இறுதி முடிவை எட்டவில்லை. இது விடயத்தில் 90 வீதமான பணி நிறைவு பெற்றுவிட்டது. விரைவில் வேட்பாளர் அறிவிக்கப்படுவார்.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் இறுதி முடிவை எடுப்பதற்காகத் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் பெரமுனக் கட்சி பேச்சு நடத்திவருகின்றது. 22 ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டு 19 வலுவிழந்தால் மஹிந்த ராஜபக்சவாலும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும். வெற்றி வேட்பாளரையே நாம் களமிறக்குவோம் - என்றார். (ச-44)

# இலக்கை எட்டினால் வரிச்சலுகை தாராளம்

கொழும்பு, ஜூலை 20

மொத்த உள்நாட்டு உற்பத்தி 15 சதவீதத்தை எட்டிய பின்னர் நாட்டு மக்களுக்கு வரிச்சலுகைகள் வழங்க எதிர்பார்க்கப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தற்போதைய வேலைத்திட்டத்தின் கீழ் இலக்கை விரைவாக எட்டமுடியும். சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்காக 7% சலுகை வட்டியுடன் கடன் வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# ராஜபக்சக்களின் அணிக்கு ஒத்துழைப்பு வழங்கோம்

## சம்பிக்க ஆணித்தரம்

கொழும்பு, ஜூலை 20

நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளிய ராஜபக்சக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் ஜனாதிபதி வேட்பாளருக்கு நாங்கள் ஆதரவு வழங்கப்போவதில்லை. பொருளாதார படுகொலையாளிகள் என்று உயர்நீதிமன்றத்தால் பெயர் குறிப்பிடப்பட்ட இவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

-இவ்வாறு ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ராஜபக்சக்களே இந்த நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளினார்கள். 2042 ஆம் ஆண்டு வரை நாம் கடன் செலுத்த வேண்டியுள்ளது - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுத்தேவைப் பூர்த்திக்கு மாற்றுவழி தேடும் மக்கள்

## இலங்கை நிலைவரம் குறித்து உலக உணவுத் திட்டம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூலை 20**

**பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை படிப்படியாக மீண்டுவருகின்றபோதிலும், நாடளாவிய ரீதியில் 10 குடும்பங்களில் 4 குடும்பங்கள் தமது அன்றாட வாழ்வாதார மற்றும் உணவுத் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்வதற்கு பல்வேறுபட்ட மாற்றுவழி முறைகளைத் தேடுகின்றன என்று உலக உணவுத்திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.**

இலங்கையின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் உலக உணவுத்திட்டம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நாடளாவிய ரீதியில் உணவுப்பாதுகாப்பின்மை நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருப்போருக்குக் கடந்த மாதம் மொத்தமாக 592 மெற்றிக் தொன் உணவு உலக உணவுத் திட்டதால் பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதுடன், ஜூலை - டிசெம்பர் வரையான எதிர்வரும் 6 மாதகாலத்துக்கு நலிவுற்ற சமூகப் பிரிவினருக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்குத் தேவையான நிதியின் பெறுமதி 84,425 அமெரிக்க டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்தகால பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை படிப்படியாக மீண்டுவருகின்றது. எனினும் நாடளாவிய ரீதியில் 10 குடும்பங்களில் 4 குடும்பங்கள் தமது அன்றாட வாழ்வாதார மற்றும் உணவுத்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு பல்வேறுபட்ட மாற்றுவழிமுறைகளைக் கையாண்டு வருகின்றன. அத்தோடு இலங்கை, காலநிலை மாற்ற சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளது. அதிகரித்த வெப்பநிலை மற்றும் உயர்வான வெப்பம் என்பன மக்களின் ஆரோக்கியத்திலும், விவசாய நடவடிக்கைகளிலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது- என்றுள்ளது. (ச-இ)

# சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தாய்லாந்துடன் கைச்சாத்து

கொழும்பு, ஜூலை 20

இலங்கையின் ஏற்றுமதியாளர்களுக்கு 15 வருடங்களுக்கு 85 சதவீத வரி விலக்களிப்பைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் தாய்லாந்துடன் கடந்த பெப்ரவரி மாதம் கைச்சாத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை இலங்கை பகிரங்கப்படுத்தியுள்ளது.

அதன்பிரகாரம் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு உயர் இலாபத்தைப் பெற்றுத்தரக்கூடியவகையில் மேற்குறிப்பிட்ட 15 சதவீதமான பொருள்கள் இறக்குமதிக் கட்டுப்பாட்டுக்குள் சேர்க்கப்படும். அத்தோடு வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் நோக்கில் இந்த ஒப்பந்தத்தில் கார் போன்ற இறக்குமதிகளுக்கு இலங்கை வரி விதித்துள்ளது.

50 சதவீத வரி விலக்களிப்புக்கு அப்பால், எஞ்சிய 30 சதவீத வரி விலக்களிப்பானது அடுத்துவரும் 15 வருடகாலத்தில் ஒவ்வொரு பகுதியாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (ச-இ)

# கனடா வரும் மாணவருக்கு வதிவிட உரிமை கிடையாது



ஒட்டாவா, ஜூலை 20

மாணவர் விசாவில் கனடாவுக்கு வருபவர்களுக்கு நிரந்தர வதிவிடவுரிமை வழங்கப்படும் என்பதற்கு எந்தவித உறுதியும் இல்லை என கனேடிய குடிவரவு,குடியகல்வு அகதிகளுக்கான அமைச்சர் மார்க் மில்லர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு சம காலப்பகுதியில் 4.37.000 மாணவர் விசா அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டின் மே மாதம் வரையும் 216.620 மாணவர் விசா அனுமதி விண்ணப்பங்கள் தகுதி பெற்றுள்ளன. கடந்த ஆண்டு மொத்தமாக 682.430 மாணவர் விசா அனுமதிப்பத்திரங்கள் கனேடிய அரசாங்கத்தால் வழங்கப்பட்டன.

வெளிநாட்டு மாணவர்களின் வருகை உயர்ந்துள்ளதால் வீட்டுவாடகை அதிகரித்துள்ளது. இதனால் கனேடிய வதிவிடவுரிமை பெற்றுக் கொள்வதற்கு மாணவர் விசா செலவு குறைந்த வழி என எவரும் நினைக்கக்கூடாது.

கனடாவில் கல்வி கற்பதற்காக வருகின்ற வெளிநாட்டு மாணவர்கள் தமது கற்கைகள் பூர்த்தியானதும் அவர்களது நாட்டுக்குச் சென்று தாம் பெற்றுக்கொண்ட அறிவை அவர்களது நாட்டுக்கே பயன்படுத்தவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-22,6)

# பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

சுகாதார அமைச்சர் யாழ்ப்பாணத்தில் பங்கேற்ற கலந்துரையாடலில் குழப்பம் விளைவித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நபர் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தால் 75 ஆயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாணச் சுகாதார மேம்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையில் வடக்கு மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது குழப்பத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் சாவகச்சேரி பொலிஸாரால் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். கைதான சந்தேகநபரை விசாரணைகளின் பின்னர் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது அவரை 75 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான், வழக்கை எதிர்வரும் 21ஆம் திகதி வரை ஒத்திவைத்தார். (ஒ-66)

# குடத்தனையில் கைக்குண்டு மீட்பு



யாழ்., ஜூலை 20

வடமராட்சி கிழக்கு - குடத்தனை பொற்பதிப் பகுதியில் பழமையான கைக்குண்டு ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியிலுள்ள தேவாலயத்துக்கு அருகாமையில் கைக்குண்டு ஒன்று காணப்பட்டுள்ளதை அவதானித்த பொதுமக்கள் கடற்படையினருக்குத் தெரிவித்தனர். அதனை மீட்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ச-100)

# தினம் தெரியுமோ?

பேஸ்புக் போராளியளுக்கு லைக்ஸ் வாங்கிறதுக்கு எப்பவும் ஏதாவது தீனி வேணும். இவ்வளவு நாளும் டாக்குத்தர் அர்ச்சுனாவை வைச்சு காலத்தை போக்காட்டிச்சினம். ஆனால் அவரும் முந்தநாளோட மூடை கட்டிக் கொண்டு கொழும்புக்கு போனபிறகு, பேஸ்புக்காரரின்ர லைக்ஸ் எல்லாம் அப்பிடியே சடக்கெண்டு குறைஞ்சு போட்டுது. அதால இனி டாக்குத்தர் அர்ச்சுனாவை 'டிஸ்சார்ஜ்' பண்ணிப்போட்டு, அவருக்குப் பதிலா இன்னொரு டாக்குத்தர் ஜெயக்குமாரனைப் பற்றி எழுதத் தொடங்கிட்டினம். அவர் ஒரு ரீவிச்சனலுக்கு குடுத்த பேட்டியை வைச்சு, தாங்களே அதுக்கு கண், காது, மூக்கு எல்லாம் வைச்சு எழுதத் தொடங்கிட்டினம். அப்பிடி அவை எழுதின கதைதான், இப்ப யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியின்ர பணிப்பாளரா இருக்கிற டாக்குத்தர் சத்தியமூர்த்திதான், டாக்குத்தர் ஜெயக்குமாரன்ர வீட்டுக்கு நெருப்பு வைச்சு, கழிவொயில் ஊத்தி கலைச்சவராம் எண்ட கதை.

ரீவிப்பேட்டியில டாக்குத்தர் ஜெயக்குமாரன் 'என்ர வீட்டை எரிச்சு, வெருட்டித்தான் என்னை யாழ்ப்பாணத்தை விட்டுக் கலைச்சவை. அதுக்குப் பின்னால பெரியாஸ்பத்திரிப் பணிப்பாளர்தான் இருந்தவர். அவரின்ர பேரைச் சொல்லக்கூட எனக்கு அருவருப்பா இருக்கு' எண்டுதான் சொன்னவர். டாக்குத்தர் ஜெயக்குமாரன்ர வீட்டுக்கு 2012 ஜூன் மாதம் 13ஆம் திகதி விடியப்பிறம் கழிவொயில் ஊத்தி, யன்னல் கண்ணாடி எல்லாம் உடைச்சு, பெற்றோல் குண்டு எறிஞ்சுபோட்டு சிலர் ஓடித்தப்பிட்டினம். அப்பிடியொரு வேலையைச் செய்தது ஆமிப் புலனாய்வுக்காரர்தான் எண்டு கதையை மாத்துறதுக்கான, கொச்சைத்தமிழில எழுதின ஒரு கடுதாசி மட்டையையும் அங்க போட்டிட்டுத்தான் போனவை. ஆனால் 'இதைச் செய்தது பெரியாஸ்பத்திரிப் பணிப்பாளர் தான்' எண்டு டாக்குத்தர் ஜெயக்குமாரன் அப்பவே சாடைமாடையாச் சொல்லியிருந்தவர். அப்பிடிச் சொல்லுறதுக்கு காரணமும் இருந்தது. உந்தச் சம்பவம் நடக்க கொஞ்சநாளைக்கு முதல் பெரியாஸ்பத்திரியில இருந்து இரும்புக்கேடர்களையும், ஒரு ஜெனரேட்டரையும் அப்ப இருந்த பணிப்பாளர் (பணிப்பாளரா இருந்தவா ஒரு பொம்பிளை) களவா வெளியில கொண்டுபோன விசயத்தை டாக்குத்தர் ஜெயக்குமாரன்தான் வெளியில கொண்டுவந்தவர். அதுக்குப் பிறகு அந்தக் கேடரும், ஜெனரேட்டரும் திரும்ப ஆஸ்பத்திரிக்குள்ள வந்தது வேற கதை. தன்ர களவை அம்பலப்படுத்திப் போட்டாரே எண்ட கோபத்திலதான் அப்ப இருந்த பணிப்பாளர், இப்பிடி ஜெயக்குமாரின்ர வீட்டுக்கு கழிவொயில் ஊத்துப்பண்ணி, அவரையும் யாழ்ப்பாணத்தில இருக்கவிடாமல் செய்தவா.

அதொண்டும் தெரியாமல் உந்தப் பேஸ்புக்குஞ்சுகள் 'சத்தியமூர்த்திதான் அவரின்ர வீட்டை எரிச்சுக் கலைச்சுப் போட்டார்' எண்டு காவித்திரியினம். ஆனால் உண்மை அதில்லை. அப்ப சத்தியமூர்த்தியர் பணிப்பாளரா இல்லை. அவர் பெரியாஸ்பத்திரிக்கு வந்தது 2015ஆம் ஆண்டுதான். ஆனால் டாக்குத்தர் ஜெயக்குமாரன் வீட்டில உந்தச் சம்பவம் நடந்தது 2012ஆம் ஆண்டு. டாக்குத்தர் சத்தியமூர்த்தி பணிப்பாளரா வாறதுக்கு மூண்டு வருசத்துக்கு முந்தியே நடந்த விசயத்துக்கு எப்பிடி அந்தாளைப் பலிக்கடாவாக்க ஏலும்? அப்ப என்னத்துக்கு 'அதைச்செய்தது டொக்டர் சத்தியமூர்த்தியா?' எண்டு அந்த ரீவிப்பேட்டியில கேக்க, ஏன் டாக்குத்தர் ஜெயக்குமாரன் பேசாமல் இருந்தவர்? ஏனெண்டால் இப்ப அவருக்கும், டாக்குத்தர் சத்தியமூர்த்திக்கும் இடையில கொழுவல். அதால இந்தச் சாட்டோட அவருக்கும் பழி விழட்டும் எண்டு நினைச்சாரோ தெரியேலை. ஆனால் பிறகு தன்ர பேஸ்புக்கில 'அந்தச்சம்பவத்துக்கும் டொக்டர்சத்தியமூர்த்திக்கும் தொடர்பில்லை. மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட வேண்டாம்' எண்டு எழுதியிருக் கிறார். பாவம் ஓரிடம் பழிவேறிடம் என்டுறது இதைத் தானோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜுலை 20
அரியாலை, பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம், எதிர்வரும் 24 ஆம் திகதி புதன் கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 15 தினங்கள் உற்சவம் நடைபெறும்.
மஹோற்சவத்தின் இரதோற்சவம் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், தீர்த்தோற்சவம் மறுநாள் புதன்கிழமை காலை 9.30 மணிக்கும் இடம்பெறுமென ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ப)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். இளைய சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள்.

**இடபம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மகிழ்ச்சி உண்டாகும். கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்:** நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணை பக்க பலமாக இருப்பார். ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பங்குதாரர்களால் அனுகூலம் உண்டு.

**கடகம்:** தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. முயற்சி சாதகமாக முடியும்.. வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே காணப்படும். காரியங்கள் அனுகூலமாகும்.

**கன்னி:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உற்சாகமாக இருப்பீர்கள். விற்பனையும் இலாபமும் மந்தமாக இருக்கும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முடிவுகளை எடுக்கலாம். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படும். முயற்சிகள் வெற்றிகரமாக முடியும். பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும்.

**விருச்சிகம் :** பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். இன்று ஆஞ்சநேயரை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளால் வீண் பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். முன்னேற்பாடுகளுடன் வெளியில் செல்லவும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. இளைய சகோதரர்கள் மூலம் பணவிரயத்துக்கு வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் சுமாராகத்தான் இருக்கும்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் உண்டாகும்.

# ஆனைக்கோட்டை அகழ்வாய்வு நிறைவு நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஜுலை 20
பிரித்தானிய சமூக முன்னேற்ற மையத்தின் மரபுரிமை அலகின் நிதிப்பங்களிப்புடனும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் அனுசரணையுடனும் ஆனைக்கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வின் நிறைவு நிகழ்வும் சான்றிதழ் கையளிப்பும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பொதுசன நூலகத்துக்கருகிலுள்ள யாழ்ப்பாண பண்பாட்டு மையத்தில் நடைபெறவுள்ளது .
யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மருத்துவ பீடாதிபதியும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் உப தலைவருமாகிய சு.ரவிராஜ் கலந்துகொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-26-66-125)

# விவசாய மாதிரிக்கிராமம் அல்வாய் கிழக்கில்

யாழ்ப்பாணம், ஜுலை 20
வடமராட்சி - அல்வாய் கிழக்குப் பகுதியிலுள்ள விவசாய மாதிரிக் கிராமம் வெள்ளிருவை மாதர் சங்க மண்டபத்தில் இன்று சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள் ளது.
இதில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பங்கேற்று ஆரம்பித்து வைக்கவுள்ளார்.
நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், யாழ்.மாவட்டப் பதில் செயலர் பிரதீபன், கரவெட்டிப் பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-100)



# கொழும்புத்துறை இந்து ம.வி. ஆண்டு நிறைவு நடைபவனி

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, நேற்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபவனி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.
இதில் பாடசாலை மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், ஊர் மக்கள் மற்றும் புலம்பெயர் தேசத்தில் இருந்தும் பல பழைய மாணவர்கள் கலந்துகொண்டனர். நடைபவனியில் ஈடுபட்டவர்களுக்கு, கொழும்புத்துறை சனசமூக நிலையத்தினரால் குளிர்பானம் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப-26,20)

# தெய்வீக இசையரங்கு பங்கேற்போரிடம் விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம், ஜுலை 20
நல்லூர்த் திருவிழாவையொட்டி துர்க்காமணி மண்டபத்தில் இளங்கலைஞர் மன்றத்தின் 25 தினங்களும் தெய்வீக இசையரங்கு இடம்பெறவுள்ளது.
இதில் பங்குபற்ற விரும்பும் கலைஞர்கள் எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# நாய்களுக்கு இலவச கருத்தடை

யாழ்ப்பாணம், ஜுலை 20
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினரால் தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக கருத்தடை சத்திரசிகிச்சை செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
எதிர்வரும் 31 ஆம் திகதிவரை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவு ரீதியாக இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது.
வளர்ப்பு நாய்களுக்குக் கருத்தடை சத்திர சிகிச்சை மேற்கொள்ளவுள்ளோர் தமது பிரிவு பொதுச் சுகாதாரப்பரிசோதகருடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

# பனைவாரக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜுலை 20
பனை அபிவிருத்தி வாரக் கண்காட்சி, சங்கிலியன் பூங்காவில் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து ஒருவார காலத்துக்கு காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறவுள்ளது.
வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தலைமையில் இடம்பெறவுள்ள கண்காட்சியில் வடமாகாணத்திலுள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்திப்பொருள்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.
அத்துடன் தினமும் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-17)

# தமிழ்த்தின விழா

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும் குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் ஆதரவில் இயங்கும் குட்டிச்சுட்டி முன்பள்ளிச் சிறார்களின் தமிழ்த்தின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கோண்டாவில் இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் வடக்கு மாகாணப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வேழினி பாலேந்திரா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆறுதலா ஆபத்தா...?

இலங்கையில் மின்கட்டணம் குறைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. நிவாரணம் என்ற பெயரில் கண்துடைப்பாக அல்லாமல், கொஞ்சம் கனதியானதாகவே இந்த மின்கட்டணக் குறைப்பு அமைந்திருக்கின்றது, அதை ஏற்கத்தான் வேண்டும். ஆனால், உண்மையில் இந்த மின்கட்டணக் குறைப்பு நாட்டின் இயல்பு நிலையால் - பொருளாதார வளர்ச்சியால் - கட்டணக் குறைப்புக்கான காரண காரியங்களால் ஏற்பட்டதுதானா? என்று வினவினால், அதற்குரிய பதில் சர்ச்சைகளும், சந்தேகங்களும் மிகுந்ததாகவே காணப்படும். ஒரு நிவாரணத்தை அரசாங்கம் தருகின்றது என்றால், 'வாய்த்ததையெல்லாம் வாங்கிக்கொள்' என்ற போக்கில் அதைப் பெற்றுவிடவேண்டும் என்று நினைப்பது ஆரோக்கியமானதல்ல. அந்த நிவாரணத்தின் பின்னரான சூட்சுமம் என்ன? உண்மையில் அது நிவாரணம்தானா அல்லது ஏதேனும் இருட்டடிப்புக்கான எத்தனமா? என்ற கேள்விகள் எம்முள் எழவேண்டும்.

இன்று உலகமே மின்நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது. ஐரோப்பிய நாடுகள் மின் கட்டணங்களை அதிகரித்துள்ளன. இவ்வளவு ஏன் எமது அயல்நாடான இந்தியாவிலும் மின் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு மின்கட்டண உயர்வு, உலகப்பொதுவான விடயமாக மாறியிருக்கையில்; இலங்கை மட்டும்தான் மின்கட்டணத்தைக் குறைத்த நாடாக மாற்றம் பெற்றிருக்கின்றது. காற்று மற்றும் சூரியஒளி உள்ளிட்ட வலுசக்திகள் மூலமான மின்னுற்பத்தித் திட்டங்களில் தன்னிறைவு காணாமல், அவற்றை மேம்படுத்தாமல் எப்படி மின்கட்டணக் குறைப்புச் சாத்தியமானது? இவ்வாறானதொரு பின்னணியில், இந்த மின்கட்டணக் குறைப்பானது 'ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்த நகர்வு' என்ற சந்தேகம் எழுந்தால், அது நியாயத்தின் பாற்பட்டதே. ஜூலை 17ஆம் திகதியுடன் ஜனாதிபதித் தேர்தலைத் தீர்மானிக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கரங்களுக்குள் வந்துள்ளது. ஜூலை 17ஆம் திகதியின் பின்னர் இந்த கட்டணக்குறைப்புத் தொடர்பில் அறிவிக்கப்பட்டால் அல்லது ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் கட்டணங்கள் குறைக்கப்பட்டால் அது தேர்தலை மையப்படுத்திய நகர்வு என்பது பட்டவர்த்தனமாகும். அதனால்தான் இந்தத் திகதி வரம்புக்கு முன்னரே சில சலுகைகள் தொடர்பில் அவசரம் காட்டியிருக்கின்றது அரசாங்கம்.

நாணய நிதியத்தின் கடனுதவிகளால் ஏற்பட்டுள்ள டொலர் இருப்பை மையப்படுத்திய, வழங்கப்பட்டுள்ள இந்தக்கட்டணக்குறைப்பு உண்மையில் மக்கள் நலன்சார்ந்த சலுகை அல்ல. இன்னும் சில மாதங்களில் இது மக்கள் மீது சுமையாக ஏற்றப்படுவதற்கான சாத்தியமே அதிகம். அத்துடன், மின்கட்டணத்தில் மக்களை எவ்வளவு முடியுமோ அவ்வளவு வதைத்தபின்னர் அறிவிக்கப்பட்டிருக்கும் இந்தக் கட்டணக் குறைப்பு, ஆச்சரியப்படுவதற்கோ அல்லது சிலிர்த்துப்போய் சில்லறைகளைத் சிதற விடுவதற்கோ ஏதுவான விடயம் அல்ல. இன்னும் சொல்லப்போனால் செப்ரெம்பர் இறுதிக்குள் அடுத்தடுத்து சில சலுகைகளும் கட்டணக் குறைப்புகளும் நிவாரணங்களும் அறிவிக்கப்படலாம். ஆனால், அந்த அறிவிப்புகள் எவற்றின் பாற்பட்டவை? உண்மையில் அவை சலுகைகளா? அல்லது வதைக்கு முன்னரான முன்னறிவிப்பா? என்ற புரிதலை மக்கள் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்...!



# தேர்தலில் முறைகேடுகள்; இடமளிப்பின் சட்டம் பாயும்

## தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் எச்சரிப்பு

**கொழும்பு, ஜூலை 20**

**தேர்தல் சட்டங்களுக்கு மதிப்பளிக்காது அரச அதிகாரிகள் பாராமுகமாகச் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவோம் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் எச்சரித்துள்ளன.**

நாடளாவிய ரீதியில் தேர்தல் சட்டங்களுக்கு அமைவாக அரச அதிகாரிகள் செயற்படவேண்டும். தேர்தல் சட்டங்களை மீறிச்செயற்படமுடியாது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுமார் 20 வேட்பாளர்கள் களமிறங்கக்கூடும்.

வடக்கு, வடமத்திய மாகாணம், ஊவா உள்ளிட்ட சில மாகாணங்களின் ஆளுநர்கள் உள்ளூராட்சி மன்றத்தேர்தல் வேட்பாளர்களைப் பல்வேறு பதவிகளுக்கு நியமித்துள்ளனர். இதுகுறித்து நாம் எமது சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடிவருகின்றோம். அரசாங்கம் தேர்தல் நோக்கங்களுக்காக அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்துவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

தேர்தல் முறைகேடுகள் தொடர்பில் தேர்தல் சட்டங்களுக்கு அமைவாக செயற்படவேண்டிய அரச அதிகாரிகள் பாராமுகமாக செயற்பட்டால், அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# காலநிலை மாற்ற இடர்கள்; தவிர்ப்பதற்கு அமெ. உதவி

கொழும்பு, ஜூலை 20

காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய அனர்த்தங்கள் மற்றும் அவசர சூழ்நிலைகளுக்கு முகங்கொடுப்பதற்கு இலங்கை தயார் நிலையில் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் அவசியமான உபகரணங்களை அமெரிக்கா நன்கொடையாக வழங்கியுள்ளன. சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் மனிதாபிமான உதவிகளுக்கான பணியகத்தின் 2.5 மில்லியன் டொலர் நிதியுதவியின்கீழ் ஐக்கிய நாடுகள் உலக உணவுத்திட்டத்தின் ஊடாக இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ச-இ)

# மரபுரிமை சின்னமாக மகாவம்சம்!

கண்டி, ஜூலை 20

பேராதனைப் பல்கலைக்கழகத்திலுள்ள மகாவம்சம் சர்வதேச மரபுரிமைச் சின்னமாக யுனெஸ்கோவால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள யுனெஸ்கோ பணிப்பாளர் அன்ட்ரே அசோலே கடந்த புதன்கிழமை இதற்கான சான்றிதழை பேராதனைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஜி.எச்.பீரிஸிடம் கையளித்தார். (ச-22,6)

# விசேட தேவையுடையோர் வாக்களிப்பதற்கு ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 20

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் விசேட தேவையுடையவர்கள் முதன்முறையாக வாக்களிப்பதற்கான வசதி ஏற்படுத்தப்படவுள்ளது. பார்வையற்றோர் மற்றும் செவித்திறன் குறைபாடுள்ளவர்களுக்கு இந்த வசதியை ஏற்படுத்த தேர்தல்கள் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

பார்வையற்றோர் தங்கள் வாக்குச்சீட்டில் உள்ள அடையாளங்களை பிறெய்லி எழுத்து முறையில் அடையாளம் காணும் அமைப்பு செயற்படுத்தப்பட்டுள்ளது.

செவித்திறன் குறைபாடுள்ளவர்கள் சைகை மொழியில் அடையாளம் காணும் வகையில் சிறப்பு அமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-6)



# கோழி, முட்டைகள் சீனாவுக்கு ஏற்றுமதி

கொழும்பு, ஜூலை 20

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் கோழி, முட்டைகள் மற்றும் அன்னாசிப்பழங்களை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு நீண்டகாலத் தடைகளை சீன அரசாங்கம் நீக்கியுள்ளது.

இலங்கைக்கு வந்திருந்த சீனா சுங்கப் பொதுநிர்வாகப் பிரதி அமைச்சர் வாங் லிங்ஜங் உள்ளிட்ட குழுவினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டது என்று விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். (ச-இ)

**நாளை**

**21.07.2024**

ஞாயிற்றுக்கிழமை - ஆடி - 05

பூரணை விரதம்

நேரம் : 09.01 - 10.31

ராகுகாலம் : 04.31 - 06.01

**நாளொரு நல்வார்த்தை**

**நம் சிரிப்பு, அடுத்தவனுக்கு கண்ணீரை வரவழைக்கிறதென்றால் நாமே நம் பற்களைத் தட்டிக்கொள்ளவேண்டும்.**

- இங்கர்சால்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு சட்டவிரோதம்

பலஸ்தீன பகுதிகளை இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ளமை சட்டவிரோதமான செயல் என்று நீதிக்கான சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (ம)

விற்பனைக்குண்டு
Toyota CHR GT (CBG xxxx)
2018 ம் ஆண்டு வாகனம்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு:
076 693 2227

## மரண அறிவித்தல்

### திருமதி கிறிஸ்ரீனா தங்கராணி

தோற்றம் 22 . 04 . 1934 — மறைவு 19 . 07 . 2024



நுணாவில் மேற்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா கிறிஸ்ரீனா தங்கராணி நேற்று (19.07.2024) வெள்ளிக்கிழமை கனடாவில் இயற்கை எய்தினார். அவரது நல்லடக்கம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.


ஏஞ்சல் (மகள்) 001 647 688 6744
றோய் (மகன்) 003 375 132 4168
சுமித்திரா (மருமகள்) 077 332 2428

தகவல்: குடும்பத்தினர்.

(CS 963) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 05 . 1960 — மறைவு 16 . 07 . 2024



### சச்சிதானந்தன் சிவசிதம்பரநாதன்

காரைநகர் மணற்காட்டைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சச்சிதானந்தன் சிவசிதம்பரநாதன் கடந்த 16.07.2024 செவ்வாய்க்கிழமை காரைநகரில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சச்சிதானந்தன் மற்றும் இராஜேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், நடராஜா மற்றும் காலஞ்சென்ற நாகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், தேனுகா, கம்ஷா, மதுஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகேஸ்வரி (ஓய்வுபெற்ற சிரேஷ்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், யாழ். மாநகர சபை, சித்த மருத்துவப் பகுதி), சிவசத்தியநாதன் - (கனடா), நாகராணி (முன்னாள் பற்சிகிச்சையாளர்-கனடா), நாகவதனா (முன்னாள் ஆசிரியை -யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வராஜா (சவுதி), விமலினி (கனடா), சோதிரூபன் (கனடா), திலீபன் (பிரான்ஸ்), அருள்ராஜா (ஜேர்மனி), லோகராஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.07.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் அவரது காரைநகர் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


10/2, சைவ மகாசபை வீதி,
மணற்காடு, காரைநகர்

தகவல்: குடும்பத்தினர்
077 6913 217

(CS 964) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 05 . 1947 — மறைவு 15 . 07 . 2024



### கமலாதேவி சண்முகராஜா

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கொக்குவில் குளப்பிட்டி, தேவாலய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கமலாதேவி சண்முகராஜா கடந்த 15.07.2024 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், லெட்சுமணன் - மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மருமகளும், சோதீஸ்வரன் (பிரான்ஸ்), சோதீஸ்வரி (பிரான்ஸ்), லோகசங்கர், சுபாஷினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், சிவதர்சினி (பிரான்ஸ்), சிவானந்தராஜா (பிரான்ஸ்), தவமணிதேவி, மாதவநேசன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், சிநேகா, சுஜாத்தா, பார்த்திபன், பிரதீப், பிரசாந், நிவிஷ், நில்ஷா, மாளவிகா, மலரவன், [illegible] ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற முருகையா மற்றும் கிஷ்ணராணி, இந்திராணி, காலஞ்சென்ற செல்வராணி ஆகியோரின் சகோதரியும், நகுலராஸா அவர்களின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.07.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் தேவாலய வீதி, குளப்பிட்டி சந்தி கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

குளப்பிட்டி சந்தி,
கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்
தொடர்பு:077 928 1415

(CS 964)

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 03 . 1941 — மறைவு 16 . 07 . 2024



### அமரர் சரஸ்வதி சரவணமுத்து

சரவணையை பிறப்பிடமாகவும் நீராவியடி, கடையிற்சுவாமி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சரஸ்வதி 16.07.2024 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-ராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செம்பர்-கதிரேசு தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செம்பர் சரவணமுத்து அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம், சதாசிவம், லெட்சுமி மற்றும் யோகம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான குணரட்ணம், ஜெயரட்ணம், விஜயரட்ணம், கிருஸ்ணவேணி மற்றும் பத்மலோயினி, சிலோயினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற ஸ்ரீதரன் மற்றும் திருமாள், பத்மநாதன், மகேஸ்வரி, சரோயா ஆகியோரின் பாசமிகு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.07.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

20/2 கடையிற்சுவாமி வீதி
நீராவியடி
யாழ்ப்பாணம்.

தகவல்:
பேரன்
076 978 5215

(CS 962) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மருத்துவமனையில் மருந்துகளுக்கும் தட்டுப்பாடு

## சுகாதார அமைச்சரிடம் தெரிவிப்பு

**மன்னார், ஜுலை 20**

**மன்னார் மாவட்ட மருத்துவமனையில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதாகவும் மருந்துகளுக்குக் கூட தட்டுப்பாடு நிலவுவதாகவும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரணவிடம் எடுத்துரைக்கப்பட்டது.**

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவும், மருத்துவமனையில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாகவும் ஆராயும் கண்காணிப்புப் பயணத்தை சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையிலான குழுவினர் கடந்த புதன்கிழமை மேற்கொண்டனர்.

மருத்துவமனையை முழுவதுமாகப் பார்வையிட்டதுடன் மருத்துவமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலும் அவர்கள் பங்கேற்றனர்.

மன்னார் மாவட்ட மருத்துவமனையில் 'சி.ரி.' ஸ்கான் இயந்திரம் இன்மையால் நாள்தோறும் அதிகளவான நோயாளர்கள் வெளிமாவட்டங்களுக்குச் செல்வதாகவும் மருத்துவர் பற்றாக்குறை, மருந்துப் பற்றாக்குறை, சுத்திகரிப்புப் பணியாளர் குறைபாடு, மருத்துவ உபகரணங்கள் குறைபாடு, அவசர நோயாளர் வண்டியின் குறைபாடு உள்ளடங்கலாக பல்வேறு விடயங்கள் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன. தீர்க்கக்கூடிய மிகப் பிரதான விடயங்களை விரைவில் தீர்த்து தருவதாகவும் ஏனைய விடயங்கள் வரவு- செலவுத் திட்டத்தின் ஊடாகப் பெற்றுத் தருவதாகவும் அமைச்சர் வாக்குறுதி வழங்கினார். மன்னார் மாவட்டத்தைப்பிரதிநிதித்துவப்படுத்தும்மக்கள்பிரதிநிதிகளும் இதில் பங்கேற்றனர். (ஒ-56)

## மாட்டிறைச்சி கடத்தியோர் மக்களால் மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம் , ஜுலை 20

புங்குடுதீவு – மடத்துவெளி கடற்படைக் காவலரண் ஊடாக 100 கிலோவுக்கும் அதிகமான மாட்டிறைச்சியைக் கடத்த முயன்ற இருவர் கடற்படை மற்றும் மக்களின் உதவியுடன் பிடிக்கப்பட்டனர்.

மாட்டிறைச்சியைக் கடத்துவதற்குப் பயன்படுத்திய காரும் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட இருவரும் யாழ்ப்பாணம் ஐந்து சந்திப்பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்கள் மாட்டிறைச்சி வியாபாரம் செய்பவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ச–22–20)

**கேபிள் ரீவி-வேலையாட்கள் தேவை**

* முன் அனுபவம் உள்ளவர்கள், வாகனம் செலுத்தத் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.
* கேபிள் வேலை பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு:-077 600 3084
071 245 9439

## 'அஸ்வெசும' கொடுப்பனவு விநியோகம்

பளை, ஜுலை 20

பச்சிலைப்பள்ளிப் பிரதேச 'அஸ்வெசும' நலன்புரி நன்மைகள் பயனாளிகளுக்கான ஜுன் மாதக் கொடுப்பனவுகள் கடந்த வியாழக்கிழமையிலிருந்து வங்கிகளில் விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜுன் மாதத்துக்குரிய முதியோர் கொடுப்பனவு அஞ்சல் அலுவலகத்திலும் மாற்றுத்திறனாளிகள் கொடுப்பனவுகள் சமுர்த்தி வங்கியிலும் அடுத்த வாரம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)

## சுத்திகரிப்பு இயந்திரம் திருத்தித் தாருங்கள்

வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தில் குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் பழுதடைந்துள்ளதன் காரணமாக மாணவர்கள் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

வன்னேரிக்குளம் கிராமத்தில் தண்ணீர் உவர் நீராக மாறி வருவதன் காரணமாக மாணவர்களுக்கு சுத்திகரிப்பு இயந்திரம் மூலம் குடிதண்ணீர் வழங்கவேண்டிய கட்டாயத்தில் பாடசாலை நிர்வாகமுள்ளது. எனவே சுத்திகரிப்பு இயந்திரத்தைச் சீர்செய்வதற்கு தன்னார்வத் தொண்டர்கள் முன்வரவேண்டும் என்று பாடசாலைச் சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது. (ப–13)

**வேலையாட்கள் தேவை**

யாழ். நகரில் அமைந்துள்ள பிரபல ஹொட்டல் ஒன்றிற்கு சமையலறை சுத்திகரிப்பாளர்கள் தேவை.
(Kitchen Cleaners)

தொடர்பிற்கு: 070 7458567


யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு
ஆடைகளின் சாம்ராஜ்யம்
இந்தியன் செலக்ஷனின்
ஆடி மாத ஆடை தள்ளுபடி



திருமணப்பட்டுச் சாறிகள்
கொட்டன் சாறிகள் சல்வார்கள்
சல்வார் துணிகள்
புத்தம் புது டொப் வகைகள்
மற்றும் சிறுவர் சிறுமிகளுக்கான ஆடைத் தெரிவுகள்...
இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம்: 12.07.2024 - 06.08.2024 வரை
ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

*என்றும் மறவா*

**07ஆம் ஆண்டு 30ஆம் ஆண்டு நினைவுகள்**



| தோற்றம் | மறைவு | தோற்றம் | மறைவு |
|---|---|---|---|
| 10.01.1945 | 10.09.2017 | 07.10.1936 | 21.07.1994 |

**துரைராசா பவானிதேவி**
திதி:சஷ்டி

**தம்பு துரைராசா**
திதி:சதுர்த்தசி
20.07.2024

எமை விட்டுப் பிரிந்த அன்புத் தெய்வங்களே! நீங்கள் செய்த நற்காரியங்கள் அனைத்தையும் - நாம் மீண்டும் பெற முடியாது தவிக்கின்றோம் - உங்கள் இருவரினதும் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

அன்பு மறவாத
பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பகாலப் போராளி மகேஸ்வரன் மறைவு!



யாழ்ப்பாணம், ஜூலை 20

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகாலப் போராளிகளில் ஒருவரான தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் (பனாகொட மகேஸ்வரன்) யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலமானார்.

விடுதலைப் புலிகளின் பல்வேறு தாக்குதல்களுடன் தொடர்புடையவரான அவர், பல தடவைகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். குறிப்பாக மட்டக்களப்பு சிறையில் நீண்டகாலம் சிறையிடப்பட்டிருந்த அவர் பின்னர் சிறைமீண்டு தன் இயல்பு வாழ்வை வாழ்ந்துவந்த நிலையில் நேற்றுக் காலமானார். (அ-ம)

# சில பொருட்கள் விலை குறைப்பு

கொழும்பு, ஜூலை 20

மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் நேற்று வெள்ளிக்கிழமை முதல் மேலும் சில அத்தியாவசியப் பொருட்களின் விலையை லங்கா சதொச நிறுவனம் குறைத்துள்ளது.

இதற்கமைய ஒரு கிலோ கிராம் உளுந்தின் விலை 100 ரூபாவால் குறைக்கப்பட்டு ஆயிரத்து 400 ரூபாவாகவும், 400 கிராம் நிறை லங்கா சதொச பால்மாவின் விலை 40 ரூபாவால் குறைக்கப்பட்டு 910 ரூபாவாகவும், ஒரு கிலோ கோதுமைமா 10 ரூபாவால் குறைக்கப்பட்டு 180 ரூபாவாகவும், ஒரு கிலோ வெள்ளைச் சீனி 5 ரூபாவால் குறைக்கப்பட்டு 260 ரூபாவாகவும், ஒரு கிலோ வெள்ளை அரிசி 4 ரூபாவால் குறைக்கப்பட்டு 200 ரூபாவாகவும், ஒரு கிலோ கீரி சம்பா 2 ரூபாவால் குறைக்கப்பட்டு 258 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவுள்ளதாக லங்கா சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.

(அ-ம-66)


# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி A-9 வீதி முகப்புடன் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**


- 1 பரப்பின் விலை 15 00 000/= (15 லட்சம்)
- நல்ல சூழல்
- தரகர் தேவையில்லை
- நாவற்குழி சந்தி 1/2 Km தூரம்
- யாழ்ப்பாணத்திலிருந்து 3 1/2 Km தூரம்
- அன்ட்ரூஸ் கம்பனிக்கு அருகாமை

தொடர்பு: 076 755 8606 077 129 4999


# மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 09 . 1942

மறைவு 19 . 07 . 2024



## சூசைப்பிள்ளை மரியநாயகம்

இளவாலையை பிறப்பிடமாகவும் அலுக்கை, அளவெட்டி மற்றும் தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை மரியநாயகம் அவர்கள் நேற்று (19.07.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை-அந்தோனியா ராணி தம்பதியரின் அன்பு மருமகனும், ஆன்புனிதம் அவர்களின் அன்புக் கணவரும், ஜொஸ்மிலா (USA), Dr.அனோமிலன் (போதனா வைத்தியசாலை - மட்டக்களப்பு), பியோமிலன் (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பிலோமினா, [illegible] மற்றும் ஜோசேப்பின் லில்லி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், யூட் இலங்காதரன் (USA), ஷோபா, Dr.[illegible] (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், அமையரன், இஸோட்ரா, அயோமி, ஜெரேமி, மிரன் ஆகியோரின் பாசமிகு பேரனும், மேரிவிமலா, ரெட்ணராஜ், தேவராஜ், யோகராஜ், ரெஜினாமலர், தங்கராஜ், கமலா, காலஞ்சென்ற யூட் ஆனந்தராஜ் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், பாரதி (UK), சுகந்தன் (UK) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி மரியாதைக்காக கல்கிசை மகிந்த மலர்ச் சாலையில் நாளை (21.07.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு பின்பு யாழ்ப்பாணம் WHITE HOUSE மலர்ச்சாலையில் புதன்கிழமை (24.07. 2024) முற்பகல் 10.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை வைக்கப்பட்டு 25.07.2024 வியாழக்கிழமை அளவெட்டி புனித சூசையப்பர் ஆலயத்தில் காலை 9.00 மணிக்கு திருப்பலி நடைபெற்று அளவெட்டி சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

மண்ணில் 18 . 07 . 1969

விண்ணில் 17 . 07 . 2024



## திரு.ரகு (தவில் வித்துவான்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடா, டொரன்டோவை வசிப்பிடமாகவும் கொண்ட முருகையா ரகு (பிரபல்ய தவில் வித்துவான்) கடந்த 17.07.2024 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகையா மற்றும் இராஜேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும், பாலச்சந்திரன் (சுதந்திரன் அளவெட்டி பிரபல்ய நாதஸ்வர வித்துவான்), நகுலேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சுதாசினியின் அன்புக் கணவரும், திவாரகா, கிறிஸ்ரிகா சினேகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரமேஷ் (இலங்கை), ரவிதாஸ் (அவுஸ்திரேலியா), வனஜா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவசாமியின் (லண்டன்) அன்பு மச்சானும், கல்யாணி (இலங்கை), [illegible] (அவுஸ்திரேலியா), அஸ்வினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜீவாகரனின் (லண்டன்) அன்பு சகலனும், சிந்துஜன், ஷாருஜன், அனோஜன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், சாயிலேகாவின் அன்புப் பெரியப்பாவும், சிவனஜன், சிவநுஜன், சினோஜன் ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.07.2024) சனிக்கிழமை மாலை 5.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரையும் மற்றும் 21.07.2024 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிமுதல் முற்பகல் 11.30 வரை Chapel ridge Funeral home, 8911 Woodbine Avenue, Markham, ON 13rsgi இல் பார்வைக்கு வைக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு
திவாரகா (கனடா) +1 647 540 2722
சுதா (கனடா) +1 647 961 9733
சுகந்திரன் (அளவெட்டி) 075 053 0278
[illegible] 071 054 1792
ரமேஸ் (வவுனியா) 077 8380 176

தகவல்:
குடும்பத்தினர்

(CS 971) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்ட வி.போட்டிகள்; யாழ்.மாணவர்கள் சாதனை

தேசிய கனிஷ்ட மட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் பதக்கங்களைக் குவித்துள்ளனர்.

23 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான பரிதி வட்டம், குண்டெறிதல் போட்டிகளில் ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவன் பி.மிதுஷன் தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்துக்கொண்டார்.

18 வயதுக்குட்பட்ட மகளிருக்கான கோலூன்றிப் பாய்தலில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரியின் மாணவி நிருவாகா இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தைத் தனதாக்கினார்.

20 வயதுக்குட்பட்ட மகளிருக்கான கோலூன்றிப் பாய்தலில் யாழ். அருணோதயாக் கல்லூரியின் எஸ். நிருசிகா தங்கப்பதக்கத்தையும் 18 வயதுக்குட்பட்ட மகளிருக்கான் கோலூன்றிப் பாய்தலில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி ப.அபிசாலினி தங்கப்பதக்கத்தையும், 18 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் சு.கஜானன் தங்கப்பதக்கத்தையும் தனதாக்கிக்கொண்டனர். (ப-125)



பி.மிதுஷன் | ப.அபிசாலினி | நிருவாகா | சு.கஜானன் | எஸ். நிருசிகா

## இணையத்தள மோசடி

# 46 கணக்குகளில் 5000 கோடி ரூபா

கொழும்பு, ஜூலை 20

இலங்கையில் இணையம் ஊடாக சட்டவிரோதமான முறையில் நிதி கொடுக்கல் வங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட 46 கணக்குகளில் 5000 கோடி ரூபா பணம் இருப்பதாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் நிதி குற்ற விசாரணைப் பிரிவினர் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 5 இலங்கையர்கள் மற்றும் 35 வெளிநாட்டவர்கள் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப் பட்டனர். சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பட்டபோது அவர்களுக்காக சுமார் 40 சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்த தாகத் தெரியவருகிறது. (ச-இ)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் காணிகள் விற்பனைக்குண்டு.

- A9 பாதைக்கு அருகாமையிலும், தண்ணீர்த்தாங்கிக்கு முன்பகுதியிலும், 11 அடி அகலப் பாதையுடன் 6 1/2, 5 பரப்புக் காணித்துண்டுகள் உண்டு.
- நன்னீர் ஊற்றுச் சூழலுடன் சகல வகையான விற்பனை நிலையங்களும், தொழில் நிலையங்களும் அருகாமையில் அமைந்துள்ளன
- தரகர் தொடர்பு தேவையில்லை.

தொடர்புகளுக்கு:

**076 653 3860, 077 318 8770**

## காணி விற்பனைக்கு

- கொழும்புத்துறை விதானையார் வீதியில்
- 2 1/2 பரப்புக் காணி 4 பக்கமும் சுற்று மதிலுடன் விற்பனைக்கு உண்டு.
- 1 1/4 பரப்பாகவும் பிரித்து தரப்படும்
- சிறந்த சுற்று சூழல்
- நல்ல நீர் ஊற்று
- A9 வீதி 7 நிமிடம்
- கச்சேரி 10 நிமிடம்
- சுண்டுக்குழி, சென் ஜோன்ஸ் பாடசாலைகள் 7 நிமிடம்

தரகர் தேவையில்லை.

காணி உரிமையாளர்

**076 659 0583**

- யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை பிரதான வீதியில் காபட் வீதி முகப்பு 200 அடியில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- எந்தவொரு வியாபார நோக்கத்திற்கும் சிறந்த காணி.
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

காணி உரிமையாளர்

**076 659 0583**
**070 575 8086**

# UNIVERSITY OF JAFFNA
# INVITATION FOR BIDS

**Supply of Skilled, Semiskilled and Unskilled Workers to the University of Jaffna -2024/2025**

1. The Chairman, Procurement Committee, University of Jaffna invites sealed Bids for the above contract up to 2.00 p.m. on **12th August 2024.**
2. Period of contract should be 365/6 days subject to a performance evaluation period of 60 days.
3. Expected project cost per annum

| | |
|---|---|
| Total expected cost (annual) | 45.6Million |
| Jaffna premises | 24 Million |
| Ariviyalnagar premises | 21.6 Million |

4. Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences Should be provided with Bids.
   4.1 Must be registered in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance.
   4.2 Average of annual volume of supply of skilled, semiskilled and unskilled workers contracts performed in the last 3 years should be at least **Rs. 60 Million**
   4.3 Must have satisfactorily carried out at least one supply of skilled, semiskilled and unskilled workers contract to a Government Department/ Corporation/ University during the last 3 years for not less than **Rs. 20 Million.**
   4.4 Availability of trained and experienced Sri Lankan staff during the last 3 years should be at least 30.
5. Interested bidders may obtain further information from Senior Assistant Registrar, General Administration, University of Jaffna, and inspect the bidding documents at the same address on any working day during working hours.
   Contact numbers: - Tele: 021 2226517, Fax:- 021 2226517.
6. A complete set of Bidding Documents in English Language could be purchased by interested Bidders on submission of a written application to the Senior Assistant Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m. to 2.30 p.m. on any working day up to **6th August 2024** upon the submission of receipt for the payment of non-refundable Tender Fee of Rs.**5000.00.** The payment should be made in cash to the Shroff, University of Jaffna or the payment shall be deposited in favour of Bursar, University of Jaffna at the **People's Bank, University of Jaffna Branch Account Number 970000060000276** at any Branch of People's Bank in Island wide.
7. Bidders are strongly advised to attend the **Pre-bid meeting on 02nd August 2024 at 10.00 am** in the board room of the University of Jaffna and visit each location before pricing.
8. Bids shall be delivered or sent by registered post to the Senior Assistant Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57, to reach on or before **14.00 hrs, 12th August 2024 or** be deposited in the tender box kept in the Office of the Registrar on or before the above date and time. Bids will be opened soon after closing the Bids in the presence of the bidders' representatives who choose to attend
9. Bids shall be valid for a period of 91 Days (should be as at 11th November 2024) from the date fixed for closing of bids or any extended period.
10. All bids shall be accompanied by a bid security for and which shall be;
    - In the form included with the Bidding document
    - In favour of Vice-Chancellor, University of Jaffna
    - For an amount of Rs. 400,000.00 Valid up to 9th December 2024 (120 days from the date of closing of bid)
    - Issued by one of the agencies
      a. A bank operating in Sri Lanka;
      b. A bank based in another country but the guarantee "confirmed" by a bank operating in Sri Lanka;

Chairman,
Procurement Committee,
University of Jaffna
20.07.2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் அபிவிருத்திக்கு ஜப்பானின் திட்டங்கள் புத்துயிர்!

**கொழும்பு, ஜூலை 20**

**கடன் மறுசீரமைப்பு செயல்முறை வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதால், கடந்த காலத்தில் இடைநிறுத்தப்பட்ட திட்டங்கள் உள்ளிட்ட ஜப்பானிய உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியின்கீழ் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களை மீள ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாகவும் ஜப்பானிய தூதுக்குழு தெரிவித்தது.**

இலங்கைக்கு வருகை தந்துள்ள வீடமைப்பு, நிர்மாண மற்றும் நகர்ப்புறத்துறைகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஜப்பானிய உயர்மட்டக் குழுவினர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்திப்பில் ஈடுபட்டபோது இதனைத் தெரிவித்தனர்.

தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள கட்டுநாயக்க சர்வதேச விமானநிலைய அபிவிருத்தித் திட்டம், கொழும்பு துறைமுக கிழக்கு இறங்குதுறை அபிவிருத்தித் திட்டம், மத்திய அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணம் மற்றும் தொலைக்காட்சி டிஜிற்றல் ஒளிபரப்புத் திட்டம் ஆகியவற்றை உடனடியாக மீள ஆரம்பிக்கமுடியும்.

மேலும் ஜப்பானில் தனியார்துறையில் இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கத் தயாராக இருப்பதாக ஜப்பானியப் பிரதிநிதிகள் ஜனாதிபதி ரணிலிடம் தெரிவித்தனர்.

மேலும், காபன்வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்காக மேம்பட்ட ஜப்பானிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட திட்டங்களையும் ஜப்பானியப் பிரதிநிதிகள் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். (ச-இ)

## சிறுபோக விவசாயிகளின் பசளை மானியம் வைப்பு

கிளிநொச்சி, ஜூலை 20

சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள 9 ஆயிரத்து 91 விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் பசளை மானியப் பணம் வைப்பில் இடப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களப் பிரதி ஆணையாளர் பா.தேவரதன் தெரிவித்துள்ளார்.

9 கமநல சேவை நிலையங்களின் கீழ் உள்ள விவசாயிகளுக்கு, 7272.35 ஹெக்ரேயர் நிலப்பரப்புக்கு மானியத் தொகை வைப்பில் இடப்பட்டுள்ளது. ஏனையவர்களுக்குப் படிப்படியாக வங்கிக்கணக்குகளில் இடப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ப-113)

## மேய்ச்சல் தரவை இன்றி அவதியுறும் கால்நடைகள்

முல்லைத்தீவு - அம்பலப்பெருமாள்குளம் கால்நடை வளர்ப்பாளர்கள் மேய்ச்சல் தரவை இன்மையால் கால்நடைகளுக்கு உணவளிப்பதில் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத்தருமாறு உரிய அதிகாரிகளிடம் அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-25-13)

## மூளாய் மருத்துவமனையில் பணம், நகைகள் திருட்டு!

மூளாய் கூட்டுறவு மருத்துவமனையில் பணிபுரியும் பராமரிப்புப் பணியாளர்களின் பெட்டகம் உடைக்கப்பட்டு 2 பவுண் நகைகள் மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

மூளாய் கூட்டுறவு மருத்துவமனையின் நோயாளர்கள் மற்றும் முதியவர்களை பராமரிக்கும் பணியாளர்களுக்கென அறையொன்றினுள் 9 பெட்டகங்கள் பாதுகாப்பான முறையில் அமைக்கப்பட்டிருந்தன. குறித்த பெட்டகத்தினுள்தான் பணியாளர்கள் தமது உடைமைகளைப் பேணி வந்துள்ளனர். அந்தப் பெட்டகம் உடைக்கப்பட்டே இந்தத் திருட்டு இடம் பெற்றுள்ளது.

இரண்டேகால் பவுண் நகைகள் மற்றும் 55 ஆயிரத்து 500 ரூபா பணமும் என்பனவே இவ்வாறு திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-125)

## கடவுச்சீட்டு விண்ணப்பம் குழப்பமடைந்த மக்கள்

கொழும்பு, ஜூலை 20

கடவுச்சீட்டு விண்ணப்பதாரர்களின் வசதிக்காக நேற்றுமுதல் புதிய முறைமையின் மூலம் கடவுச்சீட்டு விண்ணப்பம் வழங்கப்படும் என குடிவரவு, குடியகல்வு திணைக்களம் அறிவித்திருந்த நிலையில் நேற்று பத்தரமுல்லவிலுள்ள குடிவரவு, குடியகல்வு திணைக்கள அலுவலகத்துக்கு முன்பாக பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஒரு விண்ணப்பதாரர் புதிய வெளிநாட்டு கடவுச்சீட்டைப் பெற அல்லது புதுப்பிக்க www.immigration.gov.lk இணையத்தளத்தின் மூலம் திகதி மற்றும் நேரத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அறிவிப்பின்படி, இது ஒரு நாள் சேவை மற்றும் சாதாரண சேவை ஆகிய இரண்டுக்கும் பொருந்தும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று காலை பத்தரமுல்லயில் உள்ள குடிவரவு, குடியகல்வு திணைக்கள அலுவலகத்துக்கு கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் வந்திருந்த போது குறிப்பிட்ட திகதி மற்றும் நேரத்தைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு மட்டுமே வாய்ப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. அதனையடுத்து பொலிஸாரும் கலகத் தடுப்புப் பிரிவினரும் அழைக்கப்பட்டு அங்கு பதற்றம் தணிக்கப்பட்டது. (ச-இ)

## மனித உ. ஆணைக்குழு தேர்தலில் கண்காணிப்பு

கொழும்பு, ஜூலை 20

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அரச அதிகாரிகளின் செயற்பாடுகளைத் தாம் கண்காணிக்கவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் காலத்தில் அரச அதிகாரிகள் சிலர் சட்டத்துக்கு முரணாக தமக்குப் பிடித்த வேட்பாளர்களுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றனர்.

அரச அதிகாரிகள் தமக்குப் பிடித்த வேட்பாளர்களுக்கு ஆதரவான மனித உரிமை மீறல்களில் ஈடுபடாதிருக்கவேண்டுமெனவும் மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-25,6)

## மரண அறிவித்தல்



தோற்றம் 01 . 12 . 1943

மறைவு 19 . 07 . 2024

### திருமதி சிவபாக்கியம் சிவன்தாசன்

இல.262 (84) பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் சிவன்தாசன் அவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை (19.07.2024) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் (ஓய்வு பெற்ற உப அதிபர் யா/வைத்தீஸ்வரா வித்தியாலயம்), பாக்கியலட்சுமி (ராதாக்கா) தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், நாகரத்தினம் தம்பதியரின் ஆசை மருமகளும், காலஞ்சென்ற சிவன்தாசன் (ஓய்வு பெற்ற கணக்காளர் தபால் திணைக்களம்) அவர்களின் பாசமிகு மனைவியும், Dr.அருள்நந்தி (முன்னாள் விவசாய பீட பேராசிரியர் கிழக்கு பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற சிவனந்தன் (ஓய்வு நிலை உதவி பொறியியலாளர் தொலை தொடர்பு நிலையம் Colombo) அவர்களின் அன்பு சகோதரியும், தவமணிதேவி காலஞ்சென்றவர்களான சித்திரா, சிவன்பாலன், சிவன்நேசன், சிவன்ரூபன், மற்றும் சிவகாமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், Dr.யோகானந்-லக்ஷிதா, சாம்பவி ஆகியோரின் அன்பு அத்தையும் தவமணி, காலஞ்சென்ற பத்மராணி, ரஞ்சிதாதேவி, சுந்தரலிங்கம் ஆகியோரின் சகலியும், Dr.சிவராஜினி, கலாநிதி சிவசொரூபி, Dr. சிவன்சுதன், சிவதவானி, சிவானி, சிவாஜினி, சிவாஞ்சன், சிவாஞ்சலி ஆகியோரின் சிறிய தாயாரும், சிவகௌரி, சிவதர்சினி ஆகியோரின் பெரியதாயாரும், கலாநிதி வாசுகி, Dr.வசுமதி, Dr.வானதி, சரவணன் ஆகியோரின் மாமியாரும், நிவீஷன், தேனுஷன் ஆகியோரின் அன்பு பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (21.07.2024) காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

262, பலாலி வீதி, கந்தர் மடம் யாழ்ப்பாணம்.


**Dr.சி.யோகானந் (மருமகன்)**
**தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை**
**077 007 9624**

(CS 973) V-1

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவில் பசு கொலை

யாழ்ப்பாணம், ஜுலை 20
புங்குடுதீவுப் பகுதியில் சட்டவிரோதமாக கால்நடைகளை இறைச்சிக்காக வெட்டி கொலை செய்யும் சம்பவம் மீண்டும் அதிகரித்துள்ளது.
புங்குடுதீவு - வரதீவு பகுதியில் உள்ள பற்றைக்காடு ஒன்றை கிராமசேவகர் தலைமையிலான குழுவினரும் அந்தப் பகுதியின் அபிவிருத்தி உத்தியோகத்தர் களும் இணைந்து சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.
இதன்போது சட்டவிரோதமான முறையில் கோமாதா ஒன்றை வெட்டி இறைச்சியாக்கிக்கொண்டிருந்த இரு நபர்கள் தப்பியோடியுள்ளனர்.
கடந்த ஒரு மாதகாலமாக புங்குடுதீவில் சட்டவிரோத இறைச்சியாக்கும் செயற்பாடுகள் வெகுவாக குறைந்திருந்த நிலையில் மீண்டும் இவ்வாறான அசம்பாவிதங்கள் தலையெடுத்துள்ளன. இது குறித்து நீதித் தரப்பினரும், பொலிஸாரும் துரித கவனத்தைச் செலுத்தவேண்டுமென்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-22-20)



## தமிழரசுக்...

தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவுகளுக்கு எதிராகவும், ஜனவரி 21 மற்றும் 27ஆம் திகதிகளில் இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவுகளை இரத்துச்செய்யக்கோரியும் திருகோணமலையைச் சேர்ந்த ஒருவரால் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.
இந்த எதிராளிகளில் ஒருவரான சுமந்திரன் ஆட்சேபனையைத் தெரிவித்ததால், ஏனைய எதிராளிகள் தமக்கும் ஆட்சேபனையைத் தெரிவிக்க வேண்டிய தேவையுள்ளதாக நீதிமன்றில் தெரிவித்தனர். அவர்களின் ஆட்சேபனைக்காக வழக்குத் தவணையிடப்பட்டிருந்தது. பிறிதொரு தவணையின்போது, தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையைச் சேர்ந்த ரட்ணவடிவேல் என்ற நபர் தன்னை இடைபுகு மனுதாரராகச் சேர்க்கும்படி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார். அவர் இடைபுகு மனுதாரராகச் சேர்க்கப்படுவதற்கு சுமந்திரன் எதிர்ப்பைப் பதிவுசெய்யவில்லை. ஆனால், ஏனைய எதிராளிகளும் வழக்காளியும் ரட்ணவடிவேல் என்ற நபர் வழக்கில் இடைபுகு மனுதாரராகச் சேர்க்கப்படுவதற்கு தமது ஆட்சேபனையைத் தெரிவித்தனர். இடைபுகு மனுதாரராக அவர் சேர்க்கப்படும் பட்சத்தில் விரைந்து முடிக்கப்பட வேண்டிய தேவையுள்ள இந்த வழக்கு இழுத்தடிக்கப்படும் என்று அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். எனினும் சட்ட நியமங்களுக்கு அமைய அவர் இடைபுகு மனுதாரராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார்.
இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சுமந்திரன், சத்தியலிங்கம், குலநாயகம் மற்றும் ரட்ணவடிவேல் ஆகியோர் வழக்குத் தொடுநரின் கோரிக்கைகளுக்கு இணங்குவதாக நீதிமன்றத்தில் நேற்று பதில்மனுத் தாக்கல் செய்தனர். சிறீதரன், மாவை. சேனாதிராஜா, குகதாசன் மற்றும் யோகேஸ்வரன் ஆகியோர் பதில் மனுத் தாக்கல் செய்யவில்லை. வழக்குத் தொடுநரின் கோரிக்கைக்கு இணங்குவதாக தாம் ஏற்கனவே நீதிமன்றத்தில் தெரிவித்துவிட்டதால், பதில்மனுத் தாக்கல் செய்யவில்லை என்று அவர்களின் சட்டத்தரணி மன்றுரைத்தார். எனினும் சட்ட நியமனங்களுக்கு அமைய பதில்மனுத் தாக்கல் செய்யவேண்டும் என்று அறிவுறுத்திய நீதிமன்றம் அதற்கு ஜுலை 30ஆம் திகதி வரை அவகாசம் வழங்கி உத்தரவிட்டது. (அ-ம-26)

## 22 ஆம்...

ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் வரை 22ஆவது திருத்தத்தை வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட வேண்டாம் என நீதியமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச ஊடகங்களுக்கு குறிப்பிட்டிருந்த நிலையில் ஜனாதிபதியின் பணிப்புக்கு அமைய சட்டமூலம் நேற்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.
அரசமைப்பின் 83ஆம் உறுப்புரையா[illegible]. அதன் (ஆ) எனும் பந்தியில் ஆறு [illegible]டுகளுக்கு மேற்பட்ட என்னும் [illegible]ற்பதத்துக்கு பதிலாக ஐந்து ஆண்டுகள் எனும் சொற்பதத்தை சேர்க்கும் வகையில் இத்திருத்தம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் சிங்கள, [illegible]ழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் [illegible]ரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கியதாக கருதப்படும் என வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு விரைவில் உத்தியோகபூர்வமாக வெளியிடவுள்ள நிலையில் ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கும் அல்லது தேர்தல் பணிகளை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் இந்தச் சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சியினரும், சிவில் அமைப்பினரும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.
வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள 22 ஆவது திருத்த வரைவினை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை பெறுவதுடன் மக்கள் வாக்கெடுப்புக்கும் செல்லவேண்டும். ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் ஜனாதிபதியின் பதவிக் காலத்துடன் தொடர்புடைய ஒரு விடயத்துக்கு சர்வஜன வாக்கெடுப்பு கோரும்போது ஜனாதிபதித் தேர்தலுக்கான பணிகள் நெருக்கடிக்குள்ளாகும் சாத்தியங்களே அதிகம்.
22ஆவது திருத்த சட்டமூலம் எதிர்வரும் வாரம் முதலாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சட்டமூலம் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் 14 நாட்களுக்குள் இலங்கை பிரஜைகள் எவரும் சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## கடமை...

மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் எவரும் இருக்கவில்லை. இதையடுத்து அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
சாவகச்சேரி மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் எவரும் இல்லாதமை தொடர்பில் அந்த நபர் வெளிப்படுத்தியதையடுத்து இது தொடர்பில் ஊடகங்களும் செய்தி வெளியிட்டிருந்தன. இதையடுத்தே, இந்தச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ மேற்படி மருத்துவமனையின் பதில் மருத்துவ அத்தியட்சகர், யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் வடக்கு மாகாணச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரிடம் விளக்கம்கோரி நேற்று வெள்ளிக்கிழமை கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.
செய்திகளின் அடிப்படையில் 1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 14க்கு அமைய மனித உரிமைகள் ஆணைக் குழுவின் சொந்தப் பிரேரணையாகப் பதிவுசெய்யப்பட்டு குறித்த மூவரிடமும் விளக்கம் கேட்டு மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளரால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விளக்க அறிக்கையை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் அந்தக் கடிதத்தில் பணிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26-100-20-66)

## குழந்தையைக்...

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அவரை அழைத்துச்சென்ற காதலனும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
முறைப்படி விவாகரத்துப் பெறாத அந்தக் குடும்பப் பெண், திருமணத்துக்கு அப்பாற்பட்ட உறவின் பொருட்டு தனது பிள்ளையைக் கைவிட்டுச் சென்றதையடுத்து இது தொடர்பில் கணவன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியிருந்தார். முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அந்தப் பெண்ணையும் அவரை அழைத்துச் சென்றவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தியதையடுத்து, அவர்கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-ம-26)

## சொகுசுக்...

புதன்கிழமை அம்பாந்தோட்டையை அடைந்திருந்தது. நேற்றுமுன்தினம் திருகோணமலையையும், நேற்று காங்கேசன்துறையையும் கப்பல் வந்தடைந்தது. நேற்று மாலை இந்தியாவை நோக்கிய தனது பயணத்தை கப்பல் ஆரம்பித்தது. (அ-ம-26-27)

## ஜனாதிபதித்...

பட்டு, அதற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் சார்க் மற்றும் பொதுநலவாய தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் இலங்கைக்கு வரவுள்ளன. ஐரோப்பியத் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தேர்தல் கண்காணிப்புப் பணிக்காக வரக்கூடிய சந்தர்ப்பம் உள்ள போதிலும், அது தொடர்பில் உறுதியாக அறிவிக்கப்படவில்லை.
அத்துடன், உள்நாட்டுத் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளும் தற்போதிருந்தே தமது பணிகளை ஆரம்பித்துள்ளன. அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலை நீதியாகவும், சுதந்திரமாகவும் நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவும் கண்காணிப்பாளர்களை நியமிக்கவுள்ளது. (அ-ச-44)

## 4 மீனவர்களை...


யில், இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.
பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து கடந்த ஏழாம் திகதி புறப்பட்ட மீனவர்களே காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
வல்வெட்டித்துறை, கல்முனை, திருகோணமலை மற்றும் முள்ளியானைச் சேர்ந்த மேற்படி நான்கு மீனவர்களும், புறப்பட்ட தினத்திலிருந்து ஐந்து தினங்களுக்குள் கரைதிரும்பியிருக்க வேண்டும். எனினும், நீண்ட நாள்களாகியும் கரைதிரும்பாததையடுத்தே இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ஒ-100)

## ஜுலை 26 ...

செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியாக நிர்ணயிக்கப்படவுள்ளது எனவும், அன்றைய நாள் அல்லாவிட்டால் ஒக்ரோபர் 5 ஆம் திகதி தேர்தல் நடப்பது உறுதியெனவும் கொழும்பு வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.
அதேவேளை, அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று அடுத்தவாரம் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## திடீரென...

னர். சிறிநகர் பகுதியில் 1996 ஆம் ஆண்டு பொதுமக்கள் குடியேற்றப்பட்ட பின்னர் 50க்கும் மேற்பட்ட வீடுகள் பொதுமக்கள் வசிப்பதற்குத் தகுதியற்ற வையாகவே இருக்கின்றன. தமக்கு வீட்டுத்திட்டங்களை வழங்குமாறு அவர்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-110)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் புதிய திருக்கைலாச வாகன வெள்ளோட்ட விழா நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் ஆரம்பமாகி இடம்பெற்றது. பண்டத்தரிப்பைச் சேர்ந்த விஸ்வப் பிரம்மஸ்ரீ கதிர்காமநாதன் கதிர்றஞ்சன் குழுவினரின் கைவண்ணத்தில் புதிய திருக்கைலாச வாகனம் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-66-125)



இலங்கை அரசைக் கண்டித்து

# இராமேஸ்வர மீனவர்கள் திரண்டு போராட்டம்

இராமேஸ்வரம், ஜூலை 20

இலங்கை அரசைக் கண்டித்து ஆயிரக்கணக்கான மீனவர்கள் இராமேஸ்வரத்தில் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டுள்ள நிலையில், உடல்நிலை பாதிக்கப்பட்டு இலங்கை சிறையில் உள்ள இராமேஸ்வரம் மீனவர்கள் மூன்று பேருக்கு உரிய சிகிச்சை அளிக்கக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கைக் கடற்படையால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தியும், கச்சதீவில் மீன் பிடிக்க அனுமதி பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கக் கோரியும் தமிழகத்தின் 5 மாவட்ட மீனவர்கள் இராமேஸ்வரம் பேருந்து நிலையம் எதிரே நேற்று வெள்ளிக்கிழமை காலை கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். (ஒ-56-100)



# ஜப்பானுக்கு பயணமான அநுர

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஜப்பான் புறப்பட்டுள்ளார்.

ஜப்பானிலுள்ள இலங்கை வர்த்தக சமூகத்தின் அழைப்பின் பேரில் அவர் ஜப்பானுக்குப்புறப்பட்டுள்ளார். நாளை சுகுபோ நகர மண்டபத்தில் உரையாற்றவுள்ளதுடன் ஜப்பானிய இராஜதந்திரிகளுடனும் அநுரகுமார திஸாநாயக்க கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார். (ச-6)

**கடை வாடகைக்கு உண்டு**

கல்வியங்காடு பிரதான வீதியில் கடை வாடகைக்கு உண்டு

தொடர்பு: 077 175 0746
077 806 9790

**வங்கி மீதி வசதி (SHOW MONEY)**

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:
074 173 7684

**காணி, வீடு விற்பனைக்கு உண்டு**

கோப்பாய் தெற்கு கிராம சபை ஒழுங்கையில் கிராம சேவையாளர் பிரிவு J/260 நில. பர. 3 குளி 8.50 அளவுள்ள காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

077 967 2152, 077 902 4248

**தேவை**

சட்டத்தரணி அலுவலகத்துக்கு இலிகிதர் ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு:
076 363 5700

**வீடு வாடகைக்கு**

யாழ். பருத்தித்துறை வீதியில் கோப்பாய்ச் சந்தியில் சகல வசதிகளுடனும் வாகன தரிப்பிடத்துடனும் கூடிய மாடி வீடு வாடகைக்கு உண்டு. தொழில் நிறுவனங்கள், தொழில் அலுவலகங்கள் நவீன உணவகங்கள் போன்ற வியாபார நிறுவனங்களுக்கேற்ற நீச்சல் தடாகத்துடன் அமைந்த தொகுதி.

077 316 2726

**கனடாவில் உயர்கல்வி**

குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

**STUDY IN UK & WORK VISA**

ஆங்கில பயிற்சியுடன் கூடிய வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு

வெற்றிகரமான 13 வருட சேவையில்

**WEC COLLEGE**

புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம்
0779265447/0776421264
0212050988,0217200989
கிளை: சங்கத்தானை,சாவகச்சேரி

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில்
55 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் [2 வது காணி].
- 20 அடிப்பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல், கட்டுக்கிணறு உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 5 1/2 இலட்சம் (550000/=)
- தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்:
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை.

(CS 965) V-1

தொடர்புகளுக்கு:
ஜெயம் 077 814 7389
077 986 5457

**31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்**



கடந்த (20.06.2024)
வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்த
எமது அன்புத் தெய்வம்

**அமரர் செல்வி மாலதி சிவராசா**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 18.07.2024 வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (20.07.2024) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத்தின் குலவிளக்கை இழந்து நாம் தவித்த வேளையில் ஓடோடி வந்து எமக்கு ஆறுதல் சொன்னவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்டவர்களுக்கும், அனுதாபப் பதாகைகளை காட்சிப் படுத்தியவர்களுக்கும், தொலைபேசி மூலம் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், சமூகவலைத்தளங்களில் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், குறிப்பாக பாடசாலைச் சமூகத்திற்கும், பழைய மாணவர் சங்கத்தினருக்கும், லெவன் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை இருகரம் கூப்பி தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அமுதசுரபி, பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்.

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.07. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org